**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 314/23 மற்றும் 316/23

எ.ம.சா1 தங்கராஜ்

| | | |
|---|---|---|
| Name | : | தங்கராஜ் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 18.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. குற்ற எண். 257/23ல் காவல்துறையினர் தயார் செய்யப்பட்ட மாதிரிவரைபடம் எ.ம.சா.ஆ1

2. டி.என்.76.ஏ.கே.3730 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் எ,.ம.சா.ஆ 2

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஒட்டி வந்த நபர் நான் தான் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று திருநெல்வேலியில் இருந்து தென்காசி நோக்கி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வாகனத்தை இயக்கினேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ1 வரைபடத்தில் விபத்தானது சாலையின்

மத்தியில் உள்ள தடுப்புசுவரில் இடதுபக்கமாக மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒட்டி சென்ற பேரூந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் ஒட்டிசென்ற பேரூந்திற்கு வலதுபக்கம் சேதாரம் இருந்தது என்றால் மத்தியில் இருந்தது. அதை நிரூபிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பேரூந்துக்கு வலதுபக்கம் தான் சேதாரம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு பின்பக்கமும் , முன்பக்கமும் சேதாரம் இருந்தது என்றால் சரியல்ல. முன்பக்கம் மட்டுமே இருந்தது. இறந்து போன நபரும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார். இறந்து போன நபர் என் வாகனத்திற்கு முன்பக்கம் சென்று வலதுபுறம் திரும்பவதற்காக நின்று கொண்டு இருந்தபோது நான் பேருந்தை கவனக்குறைவாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கை ரத்து செய்வதற்கு ஏதேனும் நடவடிகக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். நான் எழுத்தபூர்வமாக எங்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் காவல் நிலையத்தில் கொடுத்தேன். அந்த மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்ட போது நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகவில்லை என்றால் சரிதான். என் கவனக்குறைவுமற்றும் அஜாக்கிரதையாலும் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணத்திற்கு மாறாகவும், உண்மைக்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறது ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இறந்து போன நபர் ரோட்டை குறுக்காக கடக்க சென்ற

போது விபத்து ஏற்பட்டதாக சொல்வது பொய்யான தகவல் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நானும், என் நிர்வாகமும் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சாலைவிதிகளை கடைபிடிக்காமல் பேருந்தை இயக்கியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி(முழுபொ)
தென்காசி.